# வட இலங்கையில் இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகள் - ஒல்லாந்தரது காலத்தினை அடிப்படையாகக்கொண்ட ஒரு வரலாற்றுப் பார்வை

க. அருந்தவராஜா[1], மங்களரூபி சிவகுமார்[2]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
arunn.msu@gmail.com, mangalarubysivakumar@Yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

போர்த்துக்கேயரைத் தொடர்ந்து 1796 இல் ஆங்கிலேயரது செல்வாக்கானது இலங்கையில் ஏற்படும்வரை வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் கரையோரப் பகுதிகள் யாவும் ஒல்லாந்தரது வசமே காணப்பட்டிருந்தது. இக்காலப் பகுதியில் வடஇலங்கையின் பல பகுதிகளிலும் இஸ்லாமியர்களது குடியேற்றங்கள் காணப்பட்டன. உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் அனேகமாக அவர்களிடமே காணப்பட்டிருந்தது. முத்துக் குளித்தல், யானை வர்த்தகம் புகையிலை வர்த்தகம், துணி வர்த்தகம் போன்றன இவற்றில் குறிப்பிடத்தக்கன. இதன் மூலமாக அதிகளவான வருவாயினையும் இவர்கள் பெற்றனர். இவற்றினை அவதானித்த ஒல்லாந்தர் இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியில் இறங்கினர். இவர்கள் செய்துவந்த தொழில்களில் ஒல்லாந்தர் கை வைக்க ஆரம்பித்தனர். முஸ்லிம்கள் அதுவரை காலமும் வரி வசூலித்துவந்த நிலையினை இல்லாமல் செய்தனர். எத்தகைய தொடர்புகளும் இஸ்லாமியர்களுடன் வைத்திருக்கக் கூடாதென ஒல்லாந்தருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான ஒல்லாந்தரது இஸ்லாமியருக்கு எதிரான பொருளாதாரக் கொள்கையினால் அவர்கள் படிப்படியாக வட இலங்கையின் பொருளாதாத்தில் அதுவரை காலமும் பெற்றிருந்த செல்வாக்கினை இழக்க நேரிட்டபோதும் அவர்களது பொருளாதார நடவடிக்கைகளை முற்றாக ஒல்லாந்தரால் அழிக்க முடியவில்லையென்பதே நிஜம். பொதுவாக வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விவரண ஆய்வாக அமைந்த இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள் முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை என்ற அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. ஒல்லாந்தர்கால அரசாங்க அறிக்கைகள், ஆவணங்கள் முதல்நிலைத் தரவுகள் வரிசையில் பிரதான இடத்தினைப்பெற பிற்பட்ட காலத்திற்குரிய நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் என்பன இரண்டாம்நிலைத் தரவுகள் வரிசையில் காணப்படுகின்றன. வடஇலங்கையில் ஒல்லாந்தர்கால இஸ்லாமிய மக்களது பொருளாதார நடவடிக்கைகள், ஒல்லாந்தர் அவற்றினைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள், அதனால் ஏற்பட்ட விளைவுகளை வெளிப்படுத்துதல் போன்றவை ஆய்வினது பிரதான நோக்கங்களாகக் காணப்படுகின்றன. ஒல்லாந்தரது காலத்தில் அவர்கள் இஸ்லாமியர்களுக்கு எதிராக எடுத்த பொருளாதார நடவடிக்கைகளினால் இஸ்லாமியரது பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட அதேநேரத்தில் அது முற்றாக அழிக்கப்படவில்லையென்பது ஆய்வினது பிரதான கருதுகோளாகவும் உள்ளது. மேற்குறித்த விடயமாக முன்னைய ஆய்வுகள் எவையும் குறித்த விடயமாக மேற்கொள்ளப்படவில்லையென்பது கவனிக்கத்தக்கது.

**பிரதான சொற்பதங்கள்:** யானை வர்த்தகம், முத்துக் குளித்தல், பொருளாதார ஆக்கிரமிப்பு, ஒல்லாந்தச் சட்டங்கள்

## அறிமுகம்

வடஇலங்கையில் காலனித்துவ ஆட்சியாளரின் மோசமான நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனங்களுள் இஸ்லாமியர்களும் ஒரு பிரிவினர் என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கள் இல்லை. இஸ்லாமியர்கள் மத அடிப்படையில் அன்னிய ஆட்சியாளருக்கு விரோதிகளாக இருந்ததற்கும் அப்பால் அவர்கள் சமகாலத்தில் மேற்கொண்டுவந்த பொருளாதாரச் செயற்பாடுகளும் அவற்றின் மூலமாக அவர்கள் ஈட்டிய வருவாயும் காலனித்துவ ஆட்சியாளரைப் பொறாமை கொள்ளச் செய்திருந்தது. இத்தகையதொரு பின்னணியிலேதான் போர்த்துக்கேயரும் தொடர்ந்துவந்த ஒல்லாந்தரும் இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியில் முனைப்புடன் இறங்கினர். இருப்பினும் இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகளை அவர்களால் முற்றிலுமாக அளிக்க முடியவில்லை. அவ்வகையில் ஒல்லாந்தர்களது வருவாய்ப் பெருக்கத்திற்கு இஸ்லாமியர்களது ஆதரவு தேவைபட்டதென்பதனையும் மறுக்க முடியாது. குறிப்பாக யானை பிடித்தல், யானை வர்த்தகம் முத்துக்குளித்தல், முத்து வர்த்தகம் என்பனவற்றுக்காக ஒல்லாந்தர் இவர்களது உதவியினை நாடியிருந்தனர். பல சந்தர்ப்பங்களில் செய்த உதவிகளுக்குப் பதிலாக பணமாகவோ அல்லது

பண்டங்களாகவோ கூலியினை இஸ்லாமியர்கள் ஒல்லாந்தரிடமிருந்து பெற்றமைக்கான ஆதாரங்களும் உள்ளன. வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விவரண ஆய்வாக அமைந்த இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள் முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை என்ற அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. ஒல்லாந்தர்கால அரசாங்க அறிக்கைகள், ஆவணங்கள் முதல்நிலைத் தரவுகள் வரிசையில் பிரதான இடத்தினைப்பெற பிற்பட்ட காலத்திற்குரிய நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் இரண்டாம்நிலைத் தரவுகள் வரிசையில் காணப்படுகின்றன. வடஇலங்கையில் ஒல்லாந்தர்கால இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகள், ஒல்லாந்தர் அவற்றினைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் போன்றவற்றினை வெளிப்படுத்துதல் ஆய்வினது பிரதான நோக்கங்களாகக் காணப்படுகின்றன. ஒல்லாந்தரது காலத்தில் அவர்கள் இஸ்லாமியர்களுக்கு எதிராக மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளினால் இஸ்லாமியர்களது பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட அதேநேரத்தில் அது முற்றாக அழிந்துவிடவில்லையென்பது ஆய்வினது பிரதான கருதுகோளாகவும் உள்ளது. அத்துடன் நேரடியாக வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் மேற்கூறப்பட்ட ஆய்வுத்தலைப்பின் கீழ் முன்னைய ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லையென்பதும் கவனிக்கத்தக்கது.

**ஒல்லாந்தரது வடஇலங்கை வருகை**

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னதாகவே அராபியர்கள் இலங்கையுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தபோதும்கூட பிற்பட்ட காலங்களில் பல தேசங்களிலிருந்தும் இலங்கைக்கு வருகை தந்த முஸ்லிம்கள் மேற்கூறப்பட்ட அராபியர்களின் வழித்தோன்றல்களான இவர்களுடன் இணைந்துகொண்டனர். அவ்வகையில் இவர்கள் எல்லோரையும் இணைத்த வரலாறாகவே இலங்கையில் இஸ்லாமியர்களது வரலாறு அமைகின்றதெனலாம். சிங்களவர்களுக்கு மஹாவம்சம் போன்றோ அல்லது தமிழர்களுக்கு யாழ்ப்பாணவைபமாலை, கைலாயமாலை போன்றோ இஸ்லாமிய ர்களுக்கென அவர்களது ஆரம்பகால வரலாற்றினை அறிந்துகொள்ளுவதற்கு எவ்விதமான உறுதியான சான்றுகளும் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையில் இவர்களது ஆரம்பகால வரலாறானது பெருமளவிற்கு கர்ணபரம்பரைக் கதைகளை நம்பியதாகவே உள்ளது. இத்தகையதொரு பின்னணியிலேதான் இஸ்லாமியர்களது ஆரம்பகால குடியேற்றம் பற்றிய தகவல்கள் வடஇலங்கை உள்ளிட்ட முழு இலங்கையிலும் முரண்பட்ட செய்திகளாகவே உள்ளன.

இலங்கையிலுள்ள அரபு மொழிச் சாசனங்களில் காணப்படுகின்ற செய்திகள் குறைவென்றா லும்கூட இவற்றின் மூலமாக ஓரளவிற்கு இலங்கையுடன் இஸ்லாமியர்களின் ஆரம்பகாலத் தொடர்புகள் பற்றி ஓரளவிற்கு அறியமுடிகின்றது. அதனடிப்படையில் இவர்களது இலங்கையுடனான தொடர்பானது கி.பி10-15ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதாகவே உள்ளது. (அருந்தவராஜா,க.2012) இவற்றிலிருந்து ஆரம்பத்தில் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தியவர்கள் அராபியர்களெனவும் பின்னாளில் பாரசீகரும், தென்னிந்தியாவுடன் தொடர்பான முஸ்லிம்களும் இலங்கையுடனான வர்த்தகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்ததனை அறியமுடிகின்றது. இருப்பினும் ஒரு சில அறிஞர்களது கருத்தின் பிரகாரம் இலங்கையுடனான அராபியர்களது தொடர்பானது கி.பி.8ஆம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பித்துவிட்டதென்ற கருத்துக்கள் இருந்தாலும்கூட (சிற்றம்பலம்,சி.க.1993) அவர்களது குடியிருப்புக்கள் இலங்கையில் அக்காலத்திற்குரியவையே என்பதனை நிரூபிப்பதற்கான உறுதியான சான்றுகள் எவையுமில்லை. வடஇலங்கையிலும் இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் பற்றியதாக முரண்பட்ட செய்திகள் காணப்பட்டாலும்கூட இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் கி.பி13ஆம் நூற்றாண்டில் வடஇலங்கையின் சில பகுதிகளில் காணப்பட்டமைக்கான உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அராபியர்களுடன் தொடர்புபட்ட வகையில் சாசனங்கள் சில இலங்கையின் பல பகுதிகளிலும் காணப்பட்டாலும்கூட இவர்கள் தொடர்பான சாசனங்கள் எவையும் இதுவரை யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்படவில்லையென்பது கவலைக்குரியதே.

**ஒல்லாந்தரும் வடஇலங்கை இஸ்லாமியர்களும்**

இலங்கையில் ஒல்லாந்தரது செல்வாக்கு ஏற்படுவதற்கு முன்னதாக போர்த்துக்கேயரே வடஇலங்கை உள்ளிட்ட (தற்போதைய ஐந்து மாவட்டங்கள்) இலங்கையின் கரையோரங்களில் ஏறத்தாள (1505-1658) 150 வருடங்களாகச் செல்வாக்கினைச் செலுத்தியிருந்தனர். இருப்பினும் வடஇலங்கையில் இவர்களது நேரடியான செல்வாக்கானது (1519-1658) ஏறத்தாள 38 வருடங்களே காணப்பட்டது. மன்னாரின் கேந்திர முக்கியத்துவமே இவர்களை வடஇலங்கை நோக்கி நகர வைத்தது.(பத்மநாதன்,சி.2011). வடஇலங்கையில் ஐரோப்பியர்களான போர்த்துக்கேயரது செல்வாக்கு ஏற்பட்ட காலந் தொடக்கமே இஸ்லாமியர்களது வரலாற்றில் இருண்டகாலம் ஆரம்பித்துவிட்டதென்பதே உண்மை. ஐரோப்பாவில் இவர்களுக்கிடையிலே இருந்த பகைமையுணர்வின் தொடர்ச்சியினை இங்கும் காண முடிந்தது. முஸ்லிம்களது பொருளாதார வழிகள் யாவும் முடக்கப்பட்டன. பலர் வடஇலங்கையினை விட்டு வெளியேறி போர்த்துக்கேயரது தொந்தரவு இல்லாத பகுதிகளுக்கு நகர முற்பட்டனர். வட இலங்கையின் சில இடங்களிலிருந்து போர்த்துக்கேயரால் இஸ்லாமியர்கள் விரட்டவும் பட்டனர். அவ்வகையில் போர்த்துக்கேயரது காலத்தில் இவர்கள் ஓடுவதும் திரும்பி வருவதும், சேர்த்த சொத்துக்களை இழப்பதுமாக அவர்களது வரலாறு காணப்பட்டது.

அடுத்து ஆதிக்க சக்தியுள்ள நாடொன்றிடமிருந்து விடுதலை பெற்ற நாடென்ற வகையில் ஒல்லாந்து நாட்டவர்களான அவர்களது இலங்கை வருகையானது சிறப்பினைப் பெறுகின்றது. 1602இல் இலங்கையுடன் முதன் முதலாகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட ஒல்லாந்தருக்கு கண்டி மன்னனான இரண்டாம் இராஜசிங்கனது ஆதரவு கிடைத்தது. (ளுடைஎயஇஊ.சு.1972) 1652இல் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையிலான சமாதானம் நீங்கிய நிலையில் முழுஅளவில் இலங்கையில் தமது ஆதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளுவதற்கான வாய்ப்பு ஒல்லாந்தருக்குக் கிட்டியது தொடர்ந்து 1658இல் வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பெரும்பாலானவை நேரடியாகவே ஒல்லாந்தரிடம் சென்றன. மன்னாரில் விளைந்த முத்துக்களும் யானை வர்த்தகமுமே போர்த்துக்கேயரைப் போன்று ஒல்லாந்தரையும் வடஇலங்கையில் கவனத்தினைச் செலுத்த வைத்தது. மேலும் இலங்கையின் வடபகுதியானது போர்த்துக்கேயரது நேரடியான செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த காலப்பகுதியினைவிட அது ஒல்லாந்தரது செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த காலப்பகுதியே அதிகமானது.

**வடஇலங்கையில் இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகள்**

ஒல்லாந்தரது காலப்பகுதியில் வடஇலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக இஸ்லாமியக் குடியேற்றங்கள் காணப்பட்டன. குறித்த பகுதிகளில் இவர்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். ஒல்லாந்தரும் போர்த்துக்கேயரைப் போன்றே இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் அது எதிர்பாத்த அளவிற்கு அவர்களுக்கு வெற்றியினைத் தரவில்லை. போர்த்துக்கேயருடன் ஒப்பிடுமளவிற்கு இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகள் பொறுத்து ஒல்லாந்தர் மோசமானவர்களாக நடந்துகொள்ளவில்லை. காரணம் ஒல்லாந்தரைப் பொறுத்தவரை அவர்கள் சமயம் பரப்புதலைவிட வர்த்தகத்தினையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ேநசைளைஇஇநு.1944) இதனால் உள்ளூர் மதங்கள் தொடர்பாக அவ்வப்போது சகிப்பத்தன்மையினையே இவர்கள்

கடைப்பிடித்து வந்தனர். மேலும் அச்சமயத்தில் போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து விரட்டுவதற்கு ஒல்லாந்தருக்கு இஸ்லாமியரது உதவியும் தேவைப்பட்டிருந்தது.

**யானை வர்த்தகம்**

இஸ்லாமியரைப் பொறுத்தவரை அவர்கள் ஐரோப்பியரது வருகைக்கு முன்னதாகவே வடஇலங்கையில் பல்வேறு தொழில்களை மேற்கோண்டு வந்ததுடன் அவற்றில் சிறப்புத் தேர்ச்சியும் பெற்றவர்களாக விளங்கினர். இது ஒல்லாந்தரது காலத்திலும் தொடர்ந்தது. குறிப்பாக மத்திய மாகாணம், மன்னார், வன்னி போன்ற பகுதிகளில் இவர்கள் யானைகளைப் பிடிப்பதிலும் அவற்றினைப் பழக்குவதிலும் விநியோகிப்பதிலும் அவற்றினைக் கொண்டு வேலை வாங்குவதிலும் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இது மிகவும் நுட்பமானதொரு தொழில். இதனை இஸ்லாமியர்கள் பாரம்பரியமாகவே மேற்கொாண்டு வந்தனர். யானைகளைப் பிடித்துப் பழக்கிய பின்னர் அவற்றினை அரசாங்கத்திற்கோ அல்லது பிற நாடுகளுக்கோ விற்பனை செய்வர். பருத்தித்துறை, ஊர்காவற்றுறை. மன்னார் ஆகிய துறைமுகங்கள் ஊடாகவே வெளிநாடுகளுக்கு யானைகள் அனுப்பப்பட்டன.(அப்துல்ரஹீம்,எம்,எஸ்.1998) பதிலுக்கு குதிரைகளைக் கொடுத்து யானைகளைப் பண்டமாற்றுச் செய்கின்ற தொழிலிலும் இஸ்லாமியர்கள் ஈடுபட்டிருந்தனர். இத்தொழிலைத் தனித்து இவர்கள் மேற்கொண்டிருக்க வாய்ப்புக்கள் இல்லை. ஏனெனில் சமகாலத்தில் வன்னிப் பிரதேசத் தமிழ் மக்களும் யானைகளைப் பிடித்துப் பிற பகுதிகளுக்கு அனுப்பியமைக்கான ஆதாரங்கள் உள்ளன.(பத்மநாதன்,சி.2001)

யுானைகள் இந்தியாவிலிருந்த ஆட்சியாளருக்குப் பல்வேறு தொழில்களைச் செய்வதற்குத் தேவைப்பட்டன. பாரங்களை இழுப்பதற்கும் போர்க் காலங்களில் பயன்படுத்துவதற்கும் ஆலயங்களில் வைத்திருக்கவும் உலாக்கள் கொண்டு வருவதற்கும் அக்கால இந்திய ஆட்சியாளர்களுக்கு யானைகள் தேவைப்பட்டன. இதனால் இலங்கையிலிருந்து பெருமளவிலான யானைகளை அவர்கள் பெற்றனர். பொதுவாக யானைகளைப் பிடிக்கின்ற இவர்கள் பணிக்கர்கள் என்றே அழைக்கப்பட்டனர். இக்காலப்பகுதியில் வன்னியர்கள் தமது பகுதிகளில் காணப்பட்ட யானைகளைப் பிடித்து யாழ்ப்பாண அரசர்களுக்குத் திறையாக வழங்குவதும்கூட வழமையான செயலாகக் காணப்பட்டது. ‘‘திசையாயிரத்து ஐந்நாற்றுவர்’’ போன்ற வணிக கணங்களின் சாசனங்களிலும் யானைப் பந்திகள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவதாகவும் சோழமண்டலக் கரையிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் வருகின்ற வணிகர்கள் யானைகளைக் கொள்வனவு செய்து சென்றதாகவும் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார். (பத்மநாதன்,சி.2011) அவ்வகையில் இஸ்லாமியர்களுடன் இணைந்த வகையில் தமிழர்களும் இத்தகைய யானை வர்த்தகத்தில் ஈடுபட்டமையினை அறிய முடிகின்றது. இவை வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட துறைமுகங்கள் யாவுமே தமிழ் மக்கள் அதிகளவில் செறிந்து வாழ்ந்த பகுதியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய வர்த்தக நடவடிக்கைகள் ஒல்லாந்தரது காலத்திலம் தொடர்ந்தது.

**முத்து வர்த்தகம்**

முத்துக்குளித்தல் என்பதும் வடஇலங்கையில் நீண்டகாலமாக நடைபெற்ற வருகின்ற தொழிலாகக் காணப்பட்டது. எடுத்துக்காட்டாக ஆரியச்சக்கரவர்த்திகள் தமது காலத்தில் இதன் மூலமாக அதிகளவான வருமானத்தினைப் பெற்றனர். 14ஆம் நூற்றாண்டில் இது அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாகவும் காணப்பட்டிருந்தது. சிந்துவெளி நாகரிக மக்கள் மன்னாரிலிருந்து முத்துக்களை எடுத்துச் சென்றமைக்கும் ஆதாரங்கள் உள்ளன. (கிருஷ்ணராஜா, செ.2000) அவ்வகையில் வடஇலங்கை இஸ்லாமிய மக்களின் பாரம்பரிய தொழில்களிலொன்றாக முத்துக்குளித்தல் மற்றும் முத்த வர்த்தகம் என்பன காணப்பட்டதனை இதன் மூலமாக அறியமுடிகின்றதெனலாம். அவ்வகையில் இவர்களில் அனேகர் முத்துக்குளிப்பவர்களாகவும்

படகோட்டிகளாகவும் இருந்த அதேநேரத்தில் முத்து விற்பனையிலும் ஈடுபட்டிருந்தனர். (அஸீஸ்,ஏ,எம்,ஏ.1953) இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் ஐரோப்பியர்களான போர்த்துகக்கேயர். ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயரது காலத்திலும் தொடர்ந்தது. வடஇலங்கை இஸ்லாமியர்கள் துறைமுகங்களைப் பயன்படுத்துவதற்கு ஒல்லாந்த அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டியிருந்தது. எடுத்துக்காட்டாக கண்டிக்கும் வன்னிக்கும் இடையிலே நடைபெற்றுவந்த வர்த்தகத்தின்போது இடையிடையே ஒல்லாந்த அரிசினால் அமைக்கப்பட்டிருந்த கடவைகளில் இஸ்லாமியர்கள் வரிகளைச் செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (வுமைசைை யுடிநலயளளைபொந.1966)

பொதுப்படப் போர்த்துக்கேயரது ஆவணங்களில் சுதேசிகள் மற்றும் பரதேசிகள் எனப்பட்ட இரு வகையான இஸ்லாமியரகள் தொடர்பான குறிப்புக்கள் உள்ளன. இதில் சுதேசிகள் எனப்படுபவர்கள் ஆரம்பகாலங்களிலிருந்து இலங்கையில் குடியேறி வாழ்பவர்கள் எனவும் பரதேசிகள் எனப்படுபவர்கள் தென்னிந்தியாவுடன் தொடர்புடைய இஸ்லாமியர்களென்ற கருத்தும் உள்ளன. அவ்வகையில் தென்னிந்தியாவுடன் தொடர்புபட்ட வத்தகமென்பது பரதேசிகள் எனப்பட்டவர்களிடமேயே யாழ்ப்பாணத் தரசர்களது காலத்திலிருந்து இருந்து வந்துள்ளது. இது ஒல்லாந்தரது காலத்திலும் தொடர்ந்தது. இவர்கள் பாக்கு, மிளகு, தும்பு, கயிறு யானைகள், வாசனைப் பொருட்கள் போன்றவற்றினை இலங்கையிலிருந்து எடுத்துச் சென்று அங்கிருந்து துணி வகைகள், அரசி, எண்ணெய், கருவாடு போன்றவற்றினையும் எடுத்து வந்துள்ளனர். இதன் பொருட்டு வடஇலங்கையிலிருந்த ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, மாதோட்டம் போன்ற துறைமுகங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சமகாலத்தில் ஐரோப்பிய நாடுகளுடனும்கூடத் தொடர்புகளை இவர்கள் ஏற்படுத்தியிருந்தனர். இவர்கள் இங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு முத்துக்கள், இரத்தினங்கள், யானைத் தந்தங்கள் என்பனவற்றினைக் கொண்டு சென்றனர்.(கிருஷ்ணராஜா,செ.2000)

இஸ்லாமியர் வன்னியூடாகவும் வடஇலங்கையிலே காணப்பட்ட துறைமுகங்களின் மூலமாகவும் ஒல்லாந்தரது காலத்தில் கண்டி மற்றும் தென்னிந்தியப் பகுதிகளுடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வடஇலங்கையில் அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்த முஸ்லிம் வியாபாரிகள் கண்டியுடன் ஒல்லாந்தரது காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டமைக்கான குறிப்புக்கள் உள்ளன. யாழ்ப்பாணத்திற்குப் பொதி மாடுகளுடன் சென்று வியாபாரத்திலீடுபடுகின்ற இஸ்லாமியருக்கு வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென கண்டிப் பிரதானியொருவன் 1699இல் யாழ்ப்பாணத்திலிருந்த கொமாண்டருக்குக் கடிதமொன்றினையும் வரைந்திருந்தான். அத்துடன் ஒல்லாந்தரது குறிப்புக்களில் இஸ்லாமிய வர்த்தகர் சிலர் கப்பற் சொந்தகரராக இருந்தமை பற்றிய செய்திகளும் உள்ளன.(அருந்தவராஜா,க.2012) அதேநேரத்தில் 1791இல் சேகுமீராலெவ்வை பஹீர்தம்பி என்பவருக்குச் சொந்தமான கப்பல் கொழும்பிலிருந்து மன்னாருக்குச் சாயத்தினைக் கொண்டு சென்றதாகவும் 1792இல் லெவ்வைத்தம்பி மரைக்காயரது கப்பலில் கொழும்பிலிருந்து மன்னாருக்குப் புடவைகள் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் யாழ்ப்பாணக் கொமாண்டரின் வேண்டுகோளின் பிரகாரம் 10,000 இறைசால் பணத்தினை யாழ்ப்பாணத்திலிருந்த முகமதுநயினா லெவ்வை என்பவருக்கு வழங்குவதற்கு ஒல்லாந்த அதிகாரிகள் உடன்பட்டதாகவும் பேராசிரியர் சி.பத்மநாதன் கூறுகின்றார்.(பத்மநாதன்,சி.2001) மேற்குறிப்பிட்டவாறு பொதி சுமக்கின்ற மாடுகளுடன் நீண்ட தூரம் சென்று இஸ்லாமியர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டமைக்கான குறிப்புக்கள் தோம்புகளில் உள்ளன. உள்ளூர்களுக்குச் செல்லகின்ற இவர்கள் உப்பு, உப்புமீன் என்பனவற்றினைக் கொண்டு சென்று விற்பனையில் ஈடுபட்டனர். பின்னர் அங்கிருந்து பாக்கு, அரிசி, நெல், மெழுகு என்பனவற்றினை எடுத்து வந்தனர். இது யாழ்ப்பாணத்தரசரது காலத்திலிருந்து தொடர்கதையாக இருந்து வந்துள்ளது.

முத்துக் குளித்தல், மீன் பிடித்தல். மரவேலைத் தொழில்கள் என்பனவற்றிலும் இஸ்லாமியரில் சிலர் ஈடுபட்டனர். ஒல்லாந்தரது காலத்தில் வடஇலங்கையிலிருந்த இஸ்லாமியர்களில் ஒரு பிரிவினர் தையல் தொழிலிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். அரசாங்க அதிகாரிகளாகவும் பணியாற்றியுள்ளனர். எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்திலிருந்த கொமாண்டரது அலுவலகத்தில் "தொலுக்கு" என்ற பதவியானது 1793இல் இஸ்லாமியரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இங்கிருந்த இஸ்லாமிய மக்கள் அதிகாரிவரி, தலைவரி போன்றவற்றினை அரசாங்கத்திற்குச் செலுத்தி வந்ததுடன் ஊழியத்தினையும் அரசாங்கத்திற்குச் செய்ய வேண்டியிருந்தது. தோணிகளைக் கரையோரங்களுக்கு இழுத்துச் செல்லுதல், கோட்டையில் செப்புக்காசுகளைக் கணக்கிடுதல் என்பனவும் இவர்களது பணிகளாகக் காணப்பட்டன. மேலும் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு தொழில் முயற்சிகளிலும் இஸ்லாமியர்கள் ஈடுபட்டனர். வேறுசிலர் குத்தகை க்காரர்களாகவும் பணியாற்றினர். 1792 அளவில் யாழ்ப்பாணத்தில் சாயவேர் தொடர்பான குத்தகையானது சேகுநயினாப்பிள்ளையிடம் கொடுக்கப்பட்டிருந்தது. (பத்மநாதன்,சி.2001) 1791இல் நெல்வரி தொடர்பான குத்தகையானது வண்ணார்பண்ணையினைச் சேர்ந்த இஸ்லாமியரொருவரிடம் வழங்கப்பட்டது. (குணசிங்கம்,மு.2008) மேலும் மன்னாரில் சுங்கவரியினைச் சேகரிக்கின்ற பொறுப்பானது வண்ணார்பண்ணையினைச் சேர்ந்த இஸ்லாமியரான மன்னன் மாப்பிள்ளை மாலிநயினாரது பொறுப்பில் விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தரது காலத்திலிருந்து இஸ்லாமியர்களில் சிலர் அக்காலப்பகுதியில் வடஇலங்கையில் பிரபல்யமாக நடைபெற்ற மலையாளப்புகையிலை வியாபாரத்திலும் பங்கு கொண்டிருந்தனர். இதன் மூலமாக அதிகளவிலான வருமானத்தினையும் அவர்கள் சம்பாதித்தனர். யாழ்ப்பாணத்தில் அவற்றினை உற்பத்தி செய்துவந்த தமிழ் மக்களிடமிருந்து பெற்று அவற்றினைத் தென்னிந்தியாவிற்கு எடுத்துச்சென்று விற்பனை செய்தனர். தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகத்தில் துணி வகைகளும், பாக்கும் தொடர்ந்தும் பிரதான இடத்தினை வகித்தன. இலங்கையின் பல பகுதிகளுக்கும் வடஇலங்கையிலிருந்து சென்று வியாபாரத்தில் ஈடுபட்டவந்த இஸ்லாமிய மக்கள் 18ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் ஒல்லாந்த அதிகாரிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். முசிலிபத்திலும் அனுராதபுரத்திலும் வாழ்ந்த இஸ்லாமியர்கள் பலர் ஒல்லாந்தக் கம்பனிக்குத் தேவையான மிளகினை வழங்குவதற்கு இணங்கியதாக மேற்குறிக்கப்பட்ட காலத்திற்குரிய செய்திகள் தெரிவிக்கின்றன. (அருந்தவராஜா,க.2012)

ஒல்லாந்தரைப் பொறுத்தவரை அவர்கள் வடஇலங்கையில் இஸ்லாமியரது பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் பின்னர் தமது நலன்களுக்காக அவற்றினை விடுவிப்பதும் அவர்களது வழமையான செயல்களாகக் காணப்பட்டன. அவ்வப்போது இவர்களது தொழில் முயற்சிகளைப் பறித்தெடுத்த ஒல்லாந்தர் அவற்றினைத் தமது சமூகத்தவருக்கு வழங்கினர். எடுத்துக்காட்டாக வர்த்தகம் மற்றும் தையல் தொழில்களைக் குறிப்பிடலாம். அதுவரை காலமும் இஸ்லாமியர்களது பொறுப்பிலிருந்து வந்த வரி வசூல் செய்கின்ற உரிமையினை இல்லாமல் செய்தனர். இவர்களுடன் முடிந்தவரை தொடர்புகள் எவையும் வைத்திருக்கக் கூடாதென ஒல்லாந்தருக்கு அறிவுறுத் தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் யானைகளைப் பிடித்து அவற்றினைப் பழக்கி அவற்றினை இந்தியாவிற்கு அனுப்புவதில் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்ட இவர்களது நடவடிக்கைகளும் காலத்திற்குக் காலம் பாதிப்படைந்தது. ஒல்லாந்தரது நிர்வாகத்தின் ஆரம்பகாலங்களில் வடஇலங்கையில் வாழ்ந்த இஸ்லாமியரகள் பலர் வசதி படைத்தவர்களெனவும் அதனால் அவர்களிடமிருந்து அதிகளவான வரிகள் வசூலிக்கப்பட வேண்டுமெனவும் ஒல்லாந்த அரசாங்கம் ஒரு கட்டத்தில் எடுத்த முடிவானது இறுதியில் கம்பனிக்குப் பாதகமான வகையில் அமையுமென எண்ணி கைவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(சிற்றம்பலம்,சி,க.1993)

இந்தோனேஷியப் பகுதிகளிலிருந்து போர்த்துக்கேயரை விரட்டுவதற்கு ஒல்லாந்தர் அந்நாட்டில் காணப்பட்ட இஸ்லாமியர்களது உதவியனைப் பெற்றிருந்தனர். தொடர்ந்து போர்த்துக்கேயர் அங்கிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் ஒல்லாந்தர் இஸ்லாமியர்களைத் தமது எதிரிகளாகக் கருதமுற்பட்டனர். இத்தகையதொரு நிலையே வடஇலங்கை உள்ளிட்ட இலங்கை முழுவதும் ஒல்லாந்தரால் இஸ்லாமியர்களுக்கு உருவாகியது. இருப்பினும் ஒப்பீட்டளவில் போர்த்துக்கேயரது காலத்தினை விடவும் இஸ்லாமியர் ஓரளவிற்கு நின்மதியாக வாழ்ந்த காலமாக ஒல்லாந்தரது காலத்தினைக் குறிப்பிடலாம். அதேநேரத்தில் இவர்கள் மீது ஒல்லாந்தரால் கடுமையான வர்த்தக சட்டங்கள் பல பிறப்பிக்கப்பட்டன என்பதனையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதனால் வேறு தொழில்களுக்கு மாறிய இவர்கள் பொருளாதார ரீதியாகவும் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். வர்த்தகம் சரிவராத சந்தர்ப்பங்களில் இடம்பெயர்ந்து மலையகம் உள்ளிட்ட சில பகுதிகளுக்கும் சென்றனர்.

**நிறைவுரை**

அன்னியர்களான ஒல்லாந்தரது ஆட்சியில் வடஇலங்கையில் மிகவும் செல்வாக்குடன் வாழ்ந்தவந்த சிறுபான்மையினத்தவர்களான இஸ்லாமியர்கள் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டனர் என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கள் இல்லை. இருப்பினும் பொருளாதார அடிப்படையில் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் அவர்கள் தமது பாரம்பரியமான பொருளாதார நடவடிக்கைகளைக் கைவிடாமல் தொடர்ந்து செய்து வந்தனர். ஒரு கட்டத்தில் இஸ்லாமியர்களது ஆதரவில்லாமல் தமது பொருளாதார நலன்களை மேம்படுத்த முடியாதென்ற சந்தர்ப்பம் ஏற்பட்டபோது தாம் இஸ்லாமியருக்கு எதிராக விதித்த பொருளாதாரக் கட்டுப்பாடுகளை அகற்ற வேண்டிய நிலைக்கும் ஒல்லாந்தர் ஆளாகியிருந்தனர். அவ்வகையில் ஒல்லாந்தரது காலத்திலும் வடஇலங்கையில் இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்தன எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**

Peiris,P,E.(1944), The Kingdom of Jaffna Pattanam, Daily News Paper Press, Colombo.

Silva,C.R.(1962), The Portuguese in Ceylon 1617-1628, Colombo.

Tikiri Abeyasinghe,(1966), Portuguese rule in Ceylon, Colombo.

அப்துல்ரஹீம், (1998). ஐரோப்பியர் ஆட்சியில் யாழ்ப்பாண முஸ்லிம்கள், வடக்கு கிழக்கு மாகாணசபை. கொழும்பு.

அஸீஸ்,ஏ.எம்.(1953), இலங்கையில் இஸ்லாம், கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

அருந்தவராஜா,க.(2012), யாழ்ப்பாண முஸ்லிம்கள், அஞ்சு வெளியீடு, நல்லூர்.

கிருஷ்ணராஜா, செ.(2000), இலங்கை வரலாறு, பாகம் - 01, பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.

குணசிங்கம்,மு.(2008), இலங்கைத் தமிழர் முழுமையான வரலாறு, எம்.வி. வெளியீடு, சிட்னி.

சிற்றம்பலம், சி,க.(1993). யுாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.

பத்மநாதன்,சி.(2001), இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும், குமரன் பதிப்பகம், கொழும்பு.

புத்மநாதன், சி.(2011), யாழ்ப்பாண இராச்சியம் - சுருக்க வரலாறு, குமரன் பதிப்பகம், கொழும்பு.